செய்தி வெளியீடு எண்: 222 நாள்: 07.03.2019

<u>**செய்தி வெளியீடு**</u>

# தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தில் பொதுமக்கள் ஆன்–லைன் முறையில் கோரிக்கை மனுக்களை பதிவு செய்யும் வசதி அறிமுகம்

* * * * * *

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தில் பொதுமக்கள் தங்களின் கோரிக்கை மனுக்களை இணையதளம் வாயிலாக (on-line) பதிவு செய்யும் வசதியினை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மை செயலர் மற்றும் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் தலைவர் திரு.ச.கிருஷ்ணன் இ.ஆ.ப., அவர்களால் இன்று (07.03.2019) துவக்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியின் போது தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. ம.சு.சண்முகம் இ.ஆ.ப., இணை மேலாண்மை இயக்குநர் திரு.எஸ்.கோபால சுந்தர ராஜ் இ.ஆ.ப., வாரிய தலைமை பொறியாளர் திரு. வெ.சுப்பிரமணியன், வாரிய செயலர் திருமதி மு.மணிமேகலை ஆகியோர் உடன் இருந்தனர்.

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தில் பொதுமக்கள் தங்களின் கோரிக்கைகளை மனுக்களாக தலைமை அலுவலகம் அல்லது மண்டல அலுவலகங்களில் நேரடியாக அளிக்க வேண்டிய முறை தான் தற்போது வரை நடைமுறையில் இருந்து வருகின்றது. இதனால் ஏழை எளிய மக்களுக்கு கால விரையமும், பொருட் செலவும் ஏற்படுகிறது. இதனை தவிர்க்கும் வகையில் பொதுமக்கள் இனி வரும் காலங்களில் இணையதளம் மூலமாக (on-line) தங்களின் கோரிக்கைகளை பதிவு செய்யும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் www.tnscb.org என்ற இணையதளத்தில் இவ்வசதி செய்யப்பட்டுள்ளது. முதல் கட்டமாக வாரிய தலைமையிடத்திலும், எஸ்டேட் அலுவலகங்களிலும் இணையதள பதிவு முறை பயன்படுத்தப்படவுள்ளது. அடுத்த கட்டமாக எந்த பகுதியிலிருந்தும் தங்களின் குறைகள் மற்றும் கோரிக்கைகளை இணையதளத்தில் பதிவு செய்யும் முறை விரிவுபடுத்தப்படும்.

பதிவு செய்யும் மனுக்களுக்கான ஒப்புகை ரசீதினை பெற்றுக் கொள்ளும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் மனுக்களின் நிலை மற்றும் பதிலை இணையதளம் மூலமாகவே தெரிந்து கொள்ளலாம்.

மனுக்களை பதிவு செய்வோர் முதலில் தங்களின் பெயர் மற்றும் அலைபேசி எண்ணை பதிவு செய்ய வேண்டும். தங்களின் அலைபேசி எண்ணிற்கு குறுஞ்செய்தியாக (SMS) வரும் OTP எண்ணை பயன்படுத்தி பதிவு செய்து கொண்டு, அதே எண்ணிற்கு அனுப்பப்படும் தங்களுக்கான பயனீட்டாளர் பெயர் மற்றும் கடவுச் சொல்லை பயன்படுத்தி, அதன் வழியே தங்களின் மனுக்களை அதில் உள்ள பிரிவுகளின் கீழ் பதிவு செய்யலாம். பதிவு செய்ததற்கான தகவல் குறுஞ்செய்தியாக பதிவு செய்யப்பட்ட எண்ணிற்கு அனுப்பப்படும். விரைவில் இது தொடர்பான செயலி ( app ) ஒன்றும் நடைமுறைக்கு கொண்டு வரப்படவுள்ளது.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9